திருத்தம்

**கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சு**

கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்தில் ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016**

2016.02.26 ஆந் திகதிய 1956 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் ஆராய்ச்சி உதவியாளர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2. அந்த அறிவித்தலில் 6 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டு இருந்த க. பொ. த. (உ. த.) கல்வித் தகைமைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

"இரசாயன விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் இரண்டு உள்ளடக்கப்பட்டு விஞ்ஞானம்/ கணிதம்/ தொழில்நுட்பத் துறைக்குரிய பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

3. மேற்குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலின் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி 2016.04.11 ஆந் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன். இதுவரையில் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ள விண்ணப்பகாரர் மீண்டும் விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

டாக்டர் ஏ. சிவசோதி,
கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் (க. பா.).

3-580

---

திருத்தம்

**கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சு**

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016**

2016.02.26 ஆந் திகதிய 1956 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் கால்நடைவள அபிவிருத்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2. அந்த அறிவித்தலில் 6 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டு இருந்த க. பொ. த. (உ. த.) கல்வித் தகைமைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

"இரசாயன விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் இரண்டு உள்ளடக்கப்பட்டு விஞ்ஞானம்/ கணிதம்/ தொழில்நுட்பத் துறைக்குரிய பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

3. மேற்குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலின் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி 2016.04.11 ஆந் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன். இதுவரையில் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ள விண்ணப்பகாரர் மீண்டும் விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

டாக்டர் ஏ. சிவசோதி,
கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் (க. பா.).

3-581

---

திருத்தம்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

பரீட்சைத் தரவுகள் உதவியாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015

மேற்படி தலைப்பிலான 2015.12.23 ஆந் திகதியிடப்பட்ட 1947 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் முதலாவது வர்த்தமானி அறிவித்தலின் தமிழ் மொழி பெயர்ப்பின் 4 ஆம் இலக்க பந்தியின் (இ) பகுதியான "விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்." என்பது கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்படுகிறது.

(இ) "2016.01.20 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாத வராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்."

இத்திருத்தத்திற்கு பின் தகைமை பெற்றவர்கள் இருப்பின் அவ்விண்ணப்பப்படிவங்களை 2016.04.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய முகவரிக்குச் சமர்ப்பிக்க முடியும்.

டபிள்யூ. எம். என். ஜே. புஷ்பகுமார,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016, மாச்சு 24.

3-735